1991 சனவரி 25]

ஆதிதிராவிட மாணவியருக்கு விடுதி ஏற்படுத்தல்

*9468—திரு. ஜி. பழனிச்சாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டித் தொகுதி கோட்டூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஆதி திராவிட மாணவியருக்கு விடுதி ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டித் தொகுதி, கோட்டூரில் மாணவியர் விடுதி ஏற்படுத்தும் திட்டம் தற்போது இல்லை.

(ஆ) அத்தியாவசியம் மற்றும் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு வரும் ஆண்டுகளில் பரிசீலனை செய்யப்படும்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டித் தொகுதி, கோட்டூர் என்பது ஒரு கிராமப் பகுதியாகும். 15. 20 கிலோ மீட்டருக்கு உட்பட்டிருக்கக் கூடிய அந்தக் கோட்டூரில் அரிசன மாணவ மாணவியர்கள் தொலைதூரம் சென்று படித்து விட்டு, வீடு திரும்புவதற்கு மிகச் சிரமமாக இருக்கிறது. போக்குவரத்து வசதியே இல்லாத இடம். ஆகவே, இதுபோன்ற இடங்களை எடுத்துக் கொண்டு, மாணவியர் விடுதிகளை இந்த ஆண்டே அமைப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அவசியம் கருத்தில் கொண்டு, வரும் நிதியாண்டில் பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]